Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 10-2-1985 ஞாயிறுக்கிழமை (தை 28-ஜ அவ்19) பக்கம் 6

## மூன்று லண்டன் பத்திரிகையாளர் யாழ்ப்பாணத்தில் பிடிபட்டனர்

மூன்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வடக்கிலுள்ள முக்கியமான முகாமொன்றிற்கு அருகாமையில் வைத்துப் புகைப்படக் கருவிகளுடன் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்ட பின்னர் விசேஷ விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர். லண்டனைச் சேர்ந்த மைக்கல் சலஞ்சால், நிக்கலஸ் டேவிட் கோல்ட்றிஜ், பீட்டர் ஜீவனல் ஆகிய மூவருமே கைதானவர்களாவர் முதல் இருவரும் புத்தக வெளியீட்டு நிறுவனமொன்றைச் சேர்ந்தவர்கள் மூன்றுவது நபர் டெலிவிஷன் தயாரிப்பாளர். இவர்கள் மூவரும் உல்லாசப் பிரயாணிகள் என்ற பெயரில் யாழ்ப்பாணம் வந்தனராம்.

# 1500 யாழ்ப்பாண அகதிகள் 19 படகுகளில் கடந்த இரு தினத்தில் ராமேஷ்வரம் சென்றனர்

(சென்னை)

நேற்று 17 இயந்திரப்படகுகளில் 1,500 இலங்கைத் தமிழர்களும், நேற்று முன்தினம் இரண்டு படகுகளில் 35 தமிழர்களும் யாழ்ப்பாணம், மன்னார்ப் பகுதிகளிலிருந்து அகதிகளாக ராமேஷ்வரம் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் போய்ச் சேர்ந்த 1,500 பேரில் தொள்ளாயிரம் குழந்தைகளும், பெண்களும் அடங்குவார்கள் என்றும், இவர்கள் அனைவரும் கடும் பசியுடனும், சோர்வுடனும் காணப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் இனிமேல் நிம்மதியாக வாழ முடியாது என்பதாலேயே தாம் இலங்கையை விட்டு வெளியேறியதாக இவர்கள் ராமேஷ்வரத்தில் தெரிவித்தார்களாம்.

ராமேஷ்வரத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் தங்கியிருக்கும் இவர்களை யாத்திரிகளுக்கான வழிகாட்டுவோர் சங்கமும், ராமநாதபுரம் மீனவர் சங்கமும் பராமரித்து வருகின்றது. இவர்களை எங்கே அனுப்பி வைப்பது என்பதைப் பற்றி ஆராய்வதற்காக உயர் பொலிஸ் அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் ராமநாதபுரத்தில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# லலித் தனித்தனியாக ராஜீவ் பார்த்தசாரதியுடன் ரகசிய பேச்சு

## அமைச்சர் நாளை திரும்புமுன் நரசிம்மராவை சந்திப்பர்

(புதுடில்லி)

**இலங்கை ஜனாதிபதியின் விசேஷ தூதுவராக புதுடில்லி சென்றிருக்கும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியையும், பாரத வெளியுறவு கொள்கைக் குழுத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதியையும் தனித்தனியாகச் சந்தித்து ஒவ்வொரு மணி நேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ராஜீவ் காந்தியின் லலித் அத்துலத்முதலியுடனான பேச்சுவார்த்தை உதவியாளர்கள் எவருமின்றியே நடைபெற்றதாகவும், மிகமிக அந்தரங்கமாகவே இது இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதே வேளையில் ஜனாதிபதியின் கடிதமொன்றையும் அமைச்சர் கொண்டுவந்ததாகத் தெரியவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்

அமைச்சர் அத்துலத்முதலி நேற்றுக்காலை புதுடில்லிவிமான

—4-ம் பக்கம் பார்க்க

### மாலைதீவு மறுக்கிறது

(கொழும்பு)

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியையும் மாலைதீவில் சந்திக்க வைத்து இனப்

— 4-ம் பக்கம் பார்க்க

## மாதகல் கடற் பகுதியில் சூடுபட்டுப் பலர் மரணம்

மாதகல் கடற்பகுதியில் ஒரு வள்ளத்தின் மீது கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் பலர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்தபோது குறிப்பிட்ட வள்ளம் சுடப்பட்டதாகவும் அதில் பத்துக்கு மேற்பட்டோர் இருந்ததாக

— 4ம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர் மீது மீண்டும் கடற்படையினர் கைவரிசை!

(சென்னை)

ராமநாதபுரம் பகுதியிலுள்ள கோடிக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி அவர்களது வலைகளையும், மீன்களையும் அபகரித்துச் சென்றுள்ளதாக ராமநாதபுரம் பொலிஸ் அறிவித்துள்ளது

''சுடப்படுவீர்கள்'' என்று முன்னர் எச்சரித்த இலங்கைக் கடற்படையினர் பின்னர் தம்மைக் கடுமையாகத் தாக்கியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள். காயமடைந்த மீன

—4-ஆம் பக்கம் பார்க்க

### வடக்கில் பலர் கைது

வடபகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடாத்தியபோது மூன்று பெண்கள் உட்பட இருபது பேர் கைது செய்யப்பட்டதாக ராஜாங்க அமைச்சு அறிவித்தது.

## ஆயுதங்களுடன் வந்த ஒரு விமானம் திருவனந்தபுரத்தில் தரித்து நிற்கிறது!

ஆயுதங்கள் வெடிமருந்துகளுடன் வந்ததாகக் கூறப்படும் விமானமொன்று திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நேற்றிரவு இந்திய வானொலி அறிவித்தது.

போர்த்துக்கல் நாட்டிலிருந்து இலங்கைக்கு இந்த விமானம் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. எரிபொருள் நிரப்புவதற்காக மேற்படி விமானம் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இறங்கிய போதே இது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

ஜோர்தானிலிருந்து ஏற்றப்பட்டிருக்கலாமென்று சில நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுபற்றி மேலதிக தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை

### கான்ஸ்டபிள் காயமுற்றுர்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் விமலநாதன் என்பவர்

—4-ம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சிக் கொள்ளையர் 'ரெலோ' விடம் அகப்பட்டனர்! லட்சம் ரூபா பொருள் மீட்பு

(கிளிநொச்சி நிருபர் மு. விவேகானந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் கடைகளிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் நீண்டகாலமாக கொள்ளைகளை நடத்தி வந்த கோஷ்டியொன்றை இயக்கமொன்றின் உறுப்பினர்கள் வளைத்துப் பிடித்ததுடன், பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் மீட்கப்பட்டன.

கொள்ளையர்களைப் பிடித்தவர்கள் 'ரெலோ' உறுப்பினர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளையடிக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பொருட்களும் மீட்கப்பட்ட பின்னர் நேற்று அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

உழவு இயந்திரமொன்றின் உதிரிப்பாகங்கள், தனியார் ஒருவரின் புத்தம்புது ட்ராக்டர் ஆகியவையும் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள தனியார் வர்த்தக நிலையங்களில் கொள்ளையடிக்கப்பட்ட பல்லாயிரக் கண

—4ம் பக்கம் பார்க்க

### குளோபல் ரெலக்ஸ் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குளோபல் கம்யூனிக்கேசன் நிறுவனத்தில் இருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 'ரெலக்ஸ்' இயந்திரம் நேற்றுக் காலை இனம் தரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டது இத

—4-ஆம் பக்கம் பார்க்க

### இரு கொள்ளைச் சம்பவங்கள்

யாழ். அபிவிருத்திச் சபை மயிலிட்டி உப அலுவலகத்தில் உள்ள களஞ்சியத்தை உடைத்து அங்கிருந்த மின்சார உபகரணங்கள் ரோணியோ இயந்திரம் ஆகியவற்றை நேற்று

—4-ம் பக்கம் பார்க்க

## யாழ். பொதுஜன தொடர்பு அதிகாரி திரு. சண்முகசுந்தரம் நேற்று மாரடைப்பால் மரணம்!

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனைக்கு அழைத்துச் சென்று, அதே பஸ்ஸில் பூஸாவிலிருந்து விடுதலை பெற்ற 51 தமிழ் இளைஞர்களை அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து அனைவரது அன்பையும், மதிப்பையும் பெற்ற யாழ்ப்பாணம் அரசாங்க செயலக பொதுஜனத்தொடர்பு அதிகாரி திரு. எஸ் சண்முகசுந்தரம் நேற்றுக்காலை மாரடைப்பால் மரணமானுர்.

நேற்று விடுதலையான 51 இளைஞர்களையும் வவுனியாவிலிருந்து அழைத்து வருவதற்காகச் செல்வதற்கு யாழ். டவ்

—4-ம் பக்கம் பார்க்க

## கடத்தப்பட்ட சட்டத்தரணி எந்தத் தகவலும் இல்லை

கடந்த வியாழக்கிழமை இரவு தமது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட சட்டத்தரணி அமிர்தலிங்கம் பற்றிய தகவல்கள் எதுவும் பின்னர் அவர்களது குடும்பத்துக்குக் கிடைக்கவில்லை,

நேற்று முன்தினம் கிடைத்த அமைதேய தொலைபேசித் தகவலின்படி அவர் இன்று விடுவிக்கப்படலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருக்கின்றனர்.

முக்கியமான இளைஞர் இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் சிலர் திருமதி அமிர்தலிங்கத்தைச் சந்தித்து, இக்கடத்தலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று தெரிவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

# நேற்றும் இன்றும் - 'ரைம்ஸ்'

''ரைம்ஸ் ஒவ் சிலோன்'' நாளந்தப் புதினப் பத்திரிகையின் மறைவானது எதிர்பார்க்கப் படாததல்ல ஆயினும் கவலைக்குரியதாகும்.

நெடுங்காலமாக வெளிவருவது ''ரைம்ஸ்'' அத்துடன் எமது பிரசுர காலத்து நாளிதழுங்கூட அம்மட்டோடு அமையாது, அடிக்கடி எம்முடன் விறுவிறுப்பான போட்டியில் அது ஈடுபட்டும் வந்துள்ளது. 'ரைம்ஸ்', தாபிதமானது, இவ்விலங்கை நாட்டில் பிரித்தானிய அக்கறைகளைப் பிரதி பலித்தற்காகும். பாராட்டத்தக்க வகையில் அது அப்பணியைநிறைவேற்றிற்று உண்மையில், பிரித்தானிய பத்திரிகைகளின் தாராள மனப்பான்மை சிறிதும் அதற்கு ஊக்கமும் உந்துவிசையும் அளித்ததோடு, அனேக தடவைகள் காலனித்துவ அரசாங்கக் கொள்கையை அதுகாரசாரமாகக்கண்டிக்கும் தன்மை வாய்ந்து இருந்ததமையும் நாம் அறிந்தவையே.

ஆசியாவின்மகோன்னத பத்திரிகையாளர்களில் ஒருவராகியபிருங் மொறியஸ் அடங்கலாக, உன்னதமிக்க பத்திரிகாசிரியர் வரிசை ஒன்றுக்கு உரிமைகோரவல்லதாக திகழ்ந்தது —இன்று சர்வதேசநன்மதிப்பு, கணிப்பில் இடப்கோர உரித்துடைய விகடச்சித்திர விற்பன்னராகிய ஒபிறே கொலெற்றைக் கண்டுபிடித்ததாகவும் கூட நாம் ''ரைம்ஸ் ஒவ் சிலோ'' னுக்குக் கடப்பாடுடையோம்.

ஒரு காலத்தில் தலைசிறந்த பத்திரிகையாக விளங்கி ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் கழித்தபின்னர் மூடுவிழாவுக்கு ஆளாகும் ஒரு செய்தித்தாளின் மறைவானது,வெறும் வியாபார நிறுவனம் ஒன்று மூடப்படுவதை விட சற்று வேறுபட்டது, வித்தியாசமானது ஆகும்.

ஏன் எனில், உச்சநல நிலையில் வைத்து நோக்கப்படும் போது, ஒரு புதினப் பத்திரிகையானது முழுமையான வாசகர் சமுதாயம் ஒன்றன் பிரதிநிதியாகவும் செயலாற்றும்; அவர்தம் மனக்கருத்தை வெளியிட ஓர் ஊடகம் வழங்கும்; அத்துடன் அவர்களது மனக்குறைகளைச் சிறீமான் மகாஜனத்தின் உரிமையையும் பற்பல தடவை அது உறுதிப்படுத்துவதுமாகும்.

''ரைம்ஸ்'' புதினத்தாளானது அடிக்கடி எம்மைக் கடும் சர்ச்சையிலும் ஈடுபடுத்தயுள்ளது அதற்கு ஓர் உதாரணம், அக்காலத்தில் கச்சிதமாகப் பொதுவில் 'ஐம்பதுக்கு ஐம்பது'' என வழங்கிய தொகுதிவாரியான பிரதிநிதித்துவமாகும்.

அப்படி இருந்துங்கூட, கர்ணபரம் பரையான ஒரு கதை இன்றும் நிலவுவதைக் கேள்வியுறலாம். ''ரைம்ஸ்'', பத்திரிகையும் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையும் ஆங்கிலவாசகர் சமுதாயத்தின் மீது ஏறக்குறைய ஏகபோகம் பாவித்த காலம் அது லேக் ஹவுஸ் எனப்படும் ஏரிக்கரை புதினப்பத்திரிகை நிறுவனத்தின் தபாகராகிய திரு டீ. ஆர். விஜேவர்த்தன அநதநாடகளிலேயே வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்து வருமாறு: அக்காலத்தில் ''ரைம்ஸ்'' நிலைகுலைந்து அற்றுப்போயிருந்தால், அவருடைய சொந்த நிறுவனத்தின் செய்தித்தாள்களுக்கும் அது ஓர் அனர்த்தமாகவே முடிந்திருக்கக்கூடும். அத்தகைய ஒரு நிலை, அவருடைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலாம் பருவவெளியீடுகளுக்கு இருந்த, இருக்கவேண்டிய, போட்டி, எதிர்ப்பு, முரண்பட்ட கருத்து வெளிப்பாடு ஆகியவற்றை அவற்றிடமிருந்து பிடுங்கியெடுத்துவிட்டிருக்கும், என காரணம் விளங்கினார் அவர்.

அதிர்ஷ்டவசமாக இன்று இலங்கையில் பிற நாளேடுகள், தினசரிகள், தாபிதம் பெற்றுள்ளன. ஏனென்றால், சுதந்திரமான, துரிதமான புதினப்பத்திரிகைகள் இல்லாமல்,மானிட சமுதாயம் அதன் சுதந்திரத்திற்கு எதிரான, தப்பிக்க வொண்ணாத ஒருபயமுறுத்தலை எதிர்நோக்க வேண்டிவரும். அக்காரணத்தை முன்னிட்டு புதினப்பத்திரிகைகள் மீது அதிகாரிகளினாலோ அரசினாலோ கையாளப்படும் கட்டுப்பாடுகளானவை, முற்றாகத் தவிர்க்கப்பட இயலாத இடத்தும்கூட, சாவதானமாக மட்டுப படுத்தல் வேண்டும்.

''ரீவீ'' (''ரெலிவிஷன்'') எனும் தொலைக்காட்சியும், வானொலியும் பொதுவாக அரச கட்டுப்பாட்டில் உள்ளவையாகும் எப்படி இருந்தாலும், ஒரு தனி ஆளுக்குப் பணியாற்றாவோ, வேறுபட்ட பல கருத்துகளையும் சித்தாந்தங்களையும் உடைய கலப்புத் தன்மை வாய்ந்த மனித சமுதாயத்தின் பலதரப்பட்ட தேவைகளை நிறைவேற்றவோ இவற்றால் முடியாது.

அண்மை ஆண்டுகளில, வர்த்தகத் துறையினருக்கு மேலும் பல சிறந்த நலன்கள் வழங்குவதற்கானவையாகஇருந்தாலென்ன பல்வேறு தகாப் பிரயோகங்களின் முதல் அறிகுறிகளாக இருந்தாலென்ன, தலைதூக்கும் அனேக கொடுங்கோன்மைகளை எதிர்க்கும் அறைகூவலாக இருந்தாலென்ன, இப்போராட்டங்கள் எல்லாவற்றுக்கும் தலைமை தாங்கி முன் இட்டுச் செல்வன, புதினப்பத்திரிகைகளேயாம்.

ஆகையினாலேயே ஜனநாயகம் பற்றி, மக்களின் பொது நலம்பற்றி, அல்லது ஒரு சமுதாயத்தில வாழ்க்கையின் ஏற்றத் தரம்பற்றிப் பேசுவோர், புதினப் பத்திரிகைகளானவை அவற்றின் அரசியல் சார்புகள், விருப்பு வெறுப்புகள் ஆகியன எவ்வாறு இருப்பினும் சமுதாயததிலும், நாட்டிலும், ஏற்று நிறைவேற்ற வேண்டிய பாகம் கேந்திர அச்சாணி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நன்கு கணித்தல் வேண்டும். இன்றும் கூட, புதினப் பத்திரிகைகளானவை கேள்விக்கிடமான நடத்தை அடக்கியொடுக்குதல் என்பவற்றுக்கு எதிராகப் பயன்தரு வகையிற் இயங்கும் தடைகளாக அமைகின்றன.

நம் இலங்கை நாட்டின் விதியை நிருணயிப்பதில் பாரிய, துணிவான ஒருபங்கினை ''ரைம்ஸ் ஒவ் சிலோன'' நல்கியுள்ளமையை எவரும் மறுக்க மாட்டார்கள். அது முறிந்து விட்டது. பத்திரிகைத் தொழில் ரீதியாக அல்ல நிதி ரீதியாகவே ஆகும். உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை. அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை என்பது எவ்வளவு நேர்த்தியான, சிறப்பான வார்த்தைகள்!

✻டெய்லி நியூஸின் 2-2-85 ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம் இது.


## வெற்றிடம்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தனிப்பட்ட முகவரால் நடாத்தப்படும் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர் பதவி (O I. C)க்கு விண்ணப்பங்கள் பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்கு குறையாத தரத்தில் பதவி வகித்தோரிடமிருந்து கோரப்படுகின்றன. தகுந்த சம்பளம் வழங்கப்படும் 20/2/85க்கு முன் நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்க.

பிரதேச முகாமையாளர்,
பிரதேச அலுவலகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம்,
தொலை பேசி இல:- 24252


## இலவசம்

சிவராத்திரி தினத்தில் சிவபுராணம் ஓதிப் பயன் பெறும் பொருட்டு சைவ அன்பர்களுக்கு ''சிவ புராண''ப்புத்தகத்தை மில்க்வைற் ஸ்தாபனம் இலவசமாக வழங்குகின்றது புத்தகம் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட-/60 சத முத்திரை ஒட்டிய கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

# புலோலி கூட்டுறவு சங்கம் தற்காலிகமாக மூவர் சபை

(புலோலி)

புலோலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் மூவரடங்கிய தற்காலிக இயக்குநர்சபையொன்றுநியமிக்கபட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் இப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைக்கு இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பித்தது தெரிந்ததே இதனால் இவ் இயக்குனர்சபை செயலிழந்தது. தற்பொழுது கூட்டுறவு ஆக்க ஆணையாளர் இப்பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கான தற்காலிக இயக்குநர் சபையை நியமித்துள்ளார்

இத்தற்காலிக இயக்குனர் சபைத் தலைவராக உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வேலும்மயிலும் அவர்களும் இயக்குனர் சபை அங்கத்தவர்களாக கூட்டுறவுப் பரிசோதகர் திரு. கே. தணிகாசலம் வைத்தியர் திரு எஸ். கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் செயற்பட்டுவருகின்றனர்.

## கொடிதினம்

(புங்குடுதீவு)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் வருடாந்த கொடித் தினம் அடுத்த மாதம் 10ம் திகதி நிகழவிருக்கிறது. இக் கொடித் தினத்தையொட்டி நிதி சேகரிக்கும் முயற்சிகள் தற்பொது துரிதமாக மேற் கொள்ள படுகின்றன.

நிதி சேகரிபபுக்கான உண்டியல் பத்திரங்கள் பல் வேறு தொண்டர் ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## நூல் வெளியீடு

காவலூர் இலக்கியவட்டத்தினரின 'நிகழ்வுகளும் உணர்வுகளும்' என்ற நூல் வெளித்யீட்டுவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிககு கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்மாகாவித்தியாலயத்தில் நடைபெறவுளளது. அதிபர் இரு. ஆ சபாரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் விழ வில் பண்டிதர். எஸ. தியாகராசபிள்ளை, திரு எஸ் எலியாஸ், திரு வீ. சுப்பிரமணியம் ஆகியோர் அறிமுக உரையாற்றுவார்கள். புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் திரு இரத்தினராஜா சிறப்புரையாற்றுவார்.

## கும்பாபிஷேகம்

இணுவில் வட்டுவினி அருள்மிகு கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுளளது இதனை முன்னிட்டு நடைபெறவுள்ள நிகழ்சசிகளில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிறப்புரையும இடம்பெறும். இன்று முதல் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ள.



## பிறந்தநாள் வாழ்த்து

✻ யாழ்ப்பாணம் நவரத்தினம் நவமணி தம்பதிகளின் மகன் சுதாகரன் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✻ துன்னாலை வடக்கு சாமி ரகுபதி தம்பதிகளின் மகன் நிவாஸ் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொழும்புத்துறை சிவராஜா புனிதா தம்பதிகளின் மகள் உஷாநந்தினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ காவலூர் கிழக்கு யோகராசா தவம் தம்பதிகளின் மகன் விமலராஜ் இன்று தனது மூன்றாது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கரவெட்டி, துன்னாலை சிவநாதகுரு ராஜேஸ்வரி தம்பதிகளின் மகன் சங்கர் நிவாஸ் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ மட்டுவில் தெற்கு கணேசமூர்த்தி சவுந்தரநாயகி தமபதிகளின் மகள் அஞ்சலா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பரந்தன் பாலரட்ணம் விஜயா தம்பதிகளின் மகள் மஞ்சு இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## பாரத விஜயம்

போலாந்து நாட்டின் பிரதமர் ஜெனரல் பெருசலக்ஸி திங்கட்கிழமை புதுடில்லி வந்து சேருவார், இவர் நிர்வாகம் அரசியல் அதிகாரம் முதலான விடயங்கள் பற்றி பிரதமர் ராஜீவுடன் பேச்சு வார்த்தைகளை மேற் கொள்வார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## லெபனான் பெண் கடத்தல்

(பெய்றூட்)

நான்கு துப்பாக்கி மனிதர்கள் இத்தாலியத் தூதரக விசாப் பகுதியில் கடமையாற்றிய ஓர் லெபனான் பெண்மணியை அவரது இல்லத்திலிருந்து கடத்திச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி ஆசிர்வாதம்

(எர்ணாகுளம்)

கேரள விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் எர்ணாகுளத்தில் வரதட்சணை பெறுதலற்ற திருமண நிகழ்ச்சி ஒன்றிலும் பங்கு கொண்ட மணமக்களை ஆசிர்வதித்தார்.


51/2 பரப்புக் காணி காய்க்கும் தென்னைகளுடன் குளிக் கண்டி ஒழுங்கை கோப்பாய் தெற்கில் வீடு கட்டக்கூடியது. விபரங்களுக்கு: ஏல விற்பனை நிலையம், பொதுச்சந்தை கோப்பாய்

**கே.ஜீ கல்வி நிலையம்**
(இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

I·A·A I·A·B
I. C M. A
CHARTERED

ஆரம்பம்:- 10-2-1985

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு 1985/86

G·A·Q-B·A
G·S Q - B. Sc.
FIRST-IN LAWS- LL. B
FIRST- IN COMMERCE B.COM.

ஆரம்பம் 10-2-1985
உதவிப்பதிவாளர்

## வரி விளம்பரம்

### விற்கவும் வாங்கவும்

சகலவித பொருட்களும் விற்கவும் - வாங்கவும் தினமும் வாருங்கள்.
ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

### சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ள நாடுங்கள் - கொழும்பு ஸ்ருடியோ யாழ்பபாணம்.

### விற்பனைக்கு

Pure Alsation நாய்க்குட்டிகள். 45நாட்களா Wormed and Weaned 22, சோமசுந்தரம அவனியூ, சுண்டிக்குளி.

சகல கிரகதோஷ நிவிர்த்திகளுக்கும சகலவித சௌபாக்கிய விருத்திகளுககும சாஸ்திர விதிப்படி செய்யப் பெற்றதும் பூஜையில் வைக்கப்பெற்றது மான ஸ்ரீ சக்கரம் பெறறுக் கொள்ளலாம். ஏல விற்பனை நிலையம கோப்பாய்.

அல்சேசன் ( Pure Alsation ) 6 கிழமை அழகான, குட்டிகள் உண்டு. தாய் பிரலவசனில் வந்து Lassie யின் வாக்கம் கொழும்பல இருந்தவை 139, கலைஞரூட்டி ரோட், யாழ்ப்பாணம.

வெஸ்பா 150 C. C ஸ்கூட்டா விற்பனைக்கு முதலாவது உரிமையாளர் மட்டும்ம உபயோகித்தது. மாலை 3 முதல 5 மணி வரை பார்வையிடலாம். விள. இல: 1855-ஈழமுரசு

புதிய இரண்டு கதவுள்ள National குளிசாதனப் பெட்டி மலிவு விலையில விற்பனைக்கு உள்ளது. 23, ஆடியபாத வீதி, நல்லூா, யாழ்ப்பாணம.

### கோழிக்குஞ்சு

Bairaha Farms புரூயிலர் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரமபடி, கொக்குவில்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

'நியூஸ்வீக்'கில் வெளியான ஒரு கட்டுரையின் பூரணமான தமிழாக்கம் இது "எட்வர்ட் பேஹர்" என்ற பிரபல செய்திக் கட்டுரையாளர் இதனை எழுதியுள்ளார்.

# ராணுவ ஆட்சியில் சூடாநாடு; தீவிரமானபோர்க்களமாகிறது

ஏறத்தாழப் பத்து ஆண்டுகளாக, இலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவர்க்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்த பிரிவினைவாதிகளுக்கும் இடையிலான இனப் பிணக்கு, இத்தீவைத் துரத்திவரும் ஒரு அலைக்கழிவாகும். ஜனாதிபதி ஜூனியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலானபேச்சுவார்த்தைகள் சென்ற மாத இறுதியில் பிசுபிசுத்துப் போயின என்று ''நியூஸ்வீக்'' கைச் சேர்ந்த எட்வர்ட் பேஹர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வட கரைப் பிராந்தியத்தில், யாழ்ப்பாணத்திற்கு அண்மையில், செழிப்பான நாட்டுப்புறத்தினூடாக இலங்கைத் தரைப்படையினர் சப்தம், சந்தடியின்றி முன்னேறிக் கொண்டிருந்தனர் கிளர்ச்சியாளர்கள் முகாமிட்டிருந்த வீட்டை முற்றுகையிட்ட அவர்கள் துப்பாக்கியாற் சுட ஆரம்பித்தனர். அரைமணித்தியாலம் கழிந்ததும், ''தமிழப் புலிகள்'' என அழைக்கப்படுவோரில் 14 உறுப்பினர்கள் (தமிழ் இனத்திற்கெனப் பிறித்தான ஓர் அரசை நிறுவுதற்காகப் போராடி வரும் ஓர் அரை டஜன் கெரில்லா குழுக்களில் மிகப் பெரியது இந்த இயக்கமே) இறந்து கிடந்தனர் அவர்களுள், புலிகளின் பிரதி இராணுவ கமாண்டரும், நாட்டிலேயே மிக அதிகமாகத் தேடப்பட்டுவந்த மனிதனுமாகிய பண்டிதன் என்பவரும் ஒருவர்

உத்தேசமாக 5,000 தமிழ் பிரிவினைவாதிகளுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டு வரும், வளர்ந்துகொண்டுசெல்லும் போராட்டத்தில் இத்திடீர்த் தாக்குதல்தான் மிக அண்மையில் நிகழ்ந்த சம்பவமாகும். நாட்டின் முழுச் சனத்தொகையில் 13 வீதமாகிய தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையில் 1977ஆம் ஆண்டுதொட்டு நடைபெற்று வரும் மோதல்களில் நூற்றுக்கணக்கானோர் உயிர் இழந்துள்ளனர். இந்த இரத்தக் களரியைக் கண்டு, 40,000 தமிழர்கள் 18 மைல் அகலமான பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியாவுக்கு அஞ்சியோடியமையின் விளைவாக, கொழும்பு அரசாங்கத்திற்கும் புதுடில்லி அரசாங்கத்திற்கும் இடையிலான நெருக்கடிநிலை மேலும் உக்கிரம் அடைந்துள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தனது இராணுவத்திற்கு நல்ல உருககொடுக்கும் முயற்சியில் இஸ்ரேலிய பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்களை அண்மையில் அணுகியுள்ளார். இதன் நோக்கம், கெரிலாக்களைப் பேரம் பேசும் மேசைக்கு வருமாறு பலவந்தப்படுத்துவதாகுமெனினும் வெற்றிகரமான இணக்கப்பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகள் சூன்யமாகத் தெரிகின்றன ''அரசியல் தீர்வு என்றும்போல வெகு தொலைவிலேயே இருந்துவருகிறது'' என நிலைமையை விமர்சித்த கொழும்பிலுள்ள பழுத்த அனுபவசாலியான ஓர் இராசதந்திரி, ''தீர்வொன்று இல்லையாயின், ஆண்டாண்டு காலமாக இந்த இடம் ஒரு போர்க்களமாகவே விளங்கும்'' என மேலும் அச்சம் தெரிவிக்கிறார்.

1948ஆம் ஆண்டு பரித்தானியாவிடமிருந்து சிறீலங்கா அந்நாட்களில் இலங்கை எனப் பெயர் வழங்கியது சுதந்திரம் ஈட்டியபோது; எதிர்காலத்தில் வரவிருந்த பிரச்சினைகளின் சிறு சாயல்தானும் தென்படவில்லை அக்காலத்தில் சிங்களவர்களும் தமிழர்களும் ஒருங்குசேர்ந்து நாட்டை ஆண்டுவந்தனர். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், சிங்களம் மட்டுமே தனி அரச கரும மொழியாகப் பிரகடனமாகவே, இரண்டாம்தர அந்தஸ்தில் தமிழர்கள் விட்டுச் செல்லப்பட்டனர் விரைவில் தமிழர்களுக்கு முரணாகக் கல்வித்துறையிலும் தொழிற்றுறையிலும் பாரபட்சம் பாராட்டப்படுவதாக அவர்கள் முறையிடலாயினர். அதேவேளை, தமிழர்கள் மிகத் தொகையாக வசிக்கும் வடக்கில் பிராந்திய சுயாட்சி வேண்டி அவர்கள் விடுத்த கோரிக்கைகள், பொதுவில் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாயின

1977 இல் வெடித்துக் கிளம்பிய வன்முறைகள் இரண்டு கிழமைகளாக நடைபெற்றது. யாழ்ப்பாண மகாணத்தில் தமது இன மக்கள் பெருவாரியாக வாழும் பாதுகாப்பான இடங்களுக்கு அச்சத்தினால் தப்பியோடிய தமிழர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 20 000 ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டது கெரில்லா நடவடிக்கைகள் வளர்ந்து வரலாயின. 1983 ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்கள், சுற்றுக்காவலில் சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டு 13 போர்வீரர்களைக் கொன்றனர் கும்பல்களாகத் திரிந்த சிங்களவர்கள், தெருவீதிகளில் 400 உக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றதோடு, மேலும் 60,000 தமிழ் மக்களை அகதி முகாம்களில் தஞ்சம்புக வைத்தனர். தமிழ்ப் புலிகளும் ஏனைய கெரில்லா இயக்கங்களும் தமது தாக்குதல்களையும் தீவிரமாக்கினர். கூட்டமாக வகானங்களிற் செல்லும் இராணுவத்தினர் மீது திடீர் தாக்குதல்களும், அங்கொன்று இங்கொன்றாக சிங்களக் குடிசனங்களைக் கொல்வதும் இவற்றுள் உட்படும்.

அந்நாட்களுடன் ஒப்பீடாக, தற்போதைய நிலைமைஅமைதியாக உள்ளதாயினும், யாழ்ப்பாணம் பெரும்பாலும், உள்ளபடியாக, இராணுவ ஆட்சியின் கீழேயே இப்போது இருக்கிறது. கண்டிப்பான ஊரடங்குச் சட்டம் வலுவில் இருப்பதுடன் வங்கிகள், பாடசாலைகள் முதலியன மூடப்பட்டுக் கிடக்கின்றன. இப்பிரதேசத்தினுட்புகும் பிரயாணிகள் இடைக்கிடை சிறு கூட்டமாக வரும் பஸ்களில் வரும் மட்டுப்படுத்தப்பட்ட சிலரேயாவர். புலிகளிடமிருந்து வருவது தான் மிகப்பெரும் மிரட்டலாகும். ''நீடித்த கெரில்லா போர்'' நடத்தும் பணியைத் தாமாக மேற்கொண்டுள்ள இவர்களின் குறிக்கோள் சுதந்திரத் தமிழ் ''ஜனநாயக மக்கள் குடியாசு'' ஒன்றினை யாழ்ப்பாணத்தில் அமைத்தலாகும். அண்மையிலுள்ள இந்தியக் கடலோரமாகவுள்ள வனங்களில் அவர்கள் இரகசியத் தளங்கள், பயிற்சிமுகாம்கள் என்பவற்றை நடத்திவருகின்றனர் என்கிறார்கள் கொழும்பு அதிகாரிகள்.

பெரும்படியாகச் சிங்களவர்களைக் கொண்டுள்ள இலங்கை இராணுவம்தான் இப்பிரச்சினையின் ஒரு பாகத்திற்குக் காரணமாகும் ''உலகிலேயே மிக ஒழுக்கக் கட்டுப்பாடற்ற இராணுவத்தினருள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள்'' என இவர்களை வருணிக்கும், கொழும்பிலுள்ள இராஜதந்திரியொருவர், ''தம்முள் காயமுற்றோர், இறந்தோர் ஆகியோரைக் கண்டதும், ஒரேயடியாக வன்செயலில் ஈடுபட்டு, கண்ணிற்பட்ட எவரையும் துப்பாக்கியாற் சுட்டுத் தள்ளுவதே இவர்களது செயலாகி விட்டது''. எனத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தார். சென்ற (1984) ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்ப் பட்டினமாகிய மன்னாரில் நிகழ்ந்தது சரியாக இத்தன்மையானதொரு சம்பவமே இலங்கைக் கடற்படையின் ஒரு நீர்க்கலம் கெரிலாத் தாக்குதலுக்கு உட்பட்டதையடுத்து, அதற்குப் பழிக்குப்பழியாக இரண்டு மணித்தியாலங்கள் மக்களின் இரத்தம் பெருகியோட வைத்தனர். கட்டுக்கடங்கா வன்செயலாட்டத்தில் இறங்கிய ஆயுதப் படையினர் இத்தகைய மட்டுமீறிய வன்செயல்களுக்கு முடிவுகட்டும் முயற்சியில ஜெயவர்த்தா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எவராவது இராணுவ ஆதரவாளர் ஒருவரை அணுக அங்குமிங்குமாக அலைந்தார். ஆள் எவரும் கிடைப்பதாயில்லாமற்போகவே, இறுதியில் அவருக்கு வந்து வாய்த்தது. இஸ்ரேல். கடந்த (1984) அக்டோபரில் அந்நாட்டின் தலைநகராகிய ஜெரூசலேமானது கொழும்பில நிலைபெற்றுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ''அக்கறைப் பிரிவு'' ஒன்றைத் தாபித்தனர் ஆனால் உத்தியோக பூர்வமாக அந்நாடு இலங்கையோடு இராஜதந்திரத் தொடர்புகள் உடையதன்று இஸ்ரேலிய பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள், கடந்த இலையுதிர் பருவகாலத்தின்போது விசேட வேவுபார்த்தல், பயங்கரவாத எதிர்ப்பு என்பனவற்றையிட்டுஇலங்கை இராணுவப் பிரிவுகளுக்குப் பயிற்சி வகுப்புகள் நடாத்தினர் என ''நியூஸ்வீக'' சஞ்சிகை அறிந்துள்ளது.

ஜெயவர்த்தன, இராணுவப் படையினரை அதிகரிக்க வைத்தார் 1982 இல் ஆயுதப் படைகளுக்கென 45 மில்லியன் அமெரிக்க டொலர் வரையில் இலங்கை செலவுசெய்தது. சென்ற வருடம் (1984 இல்) அவர் இச்செலவை 200மில்லியன் டொலராக உயர்த்தினார். ஒரு பிரித்தானிய பாதுகாப்புக் கம்பனியின் சேவைகளையும் ஜெயவர்த்தன பணம் கொடுத்து வாடகைக்கு அமர்த்திக்கொண்டார். அக்கம்பனியின் சிவிலியன் ஊழியர்கள் முன்னைநாள் எஸ் ஏ. எஸ். (ஸ்பெஷல் எயர் சேர்விஸ்) இல் பணி புரிந்தவர்கள் கட்டணப்பண அடிப்படையில் இவர்கள் இலங்கையின் ''விசேட படை'' ஒன்றையும் பயிற்றி வருகின்றனர். இராணுவ முஸ்தீபுகளை ஒருபுறம் தீவிரப்படுத்திவரும் அதேவேளை, மறுபுறம் ஜயவர்த்தன நட்புக்கரம்ஒன்றைத் தமிழ் நடுத்தரவாதிகளுக்கு நீட்டி கொண்டும் இருந்தார். தமிழ்த் தலைவர்கள் தமது சொந்த அரசுக்கான கோரிக்கையைக் கைவிடுவார்களாயின் அவர் தமிழ்ப் பிரதேசங்களில் அவர்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டசுய அரசாங்க அதிகாரம் வழங்கவும் முன்வந்தார்.

## 1948ம் ஆண்டிலேயே நந்திக் கொடி ஏற்றிய தமிழர் தலைவர் ஜி ஜி.

அரை நூற்றாண்டு காலமாக தமிழினத்தின் தனிப்பெரும் தலைவனாக விளங்கிய அமரர் ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்களின் எட்டாவது சிரார்த்த தினம் நேற்றாகும். தமிழ்க் குலம் வாழ, தமிழ்மண் சிறக்க தமிழ்தாயின் அருந்தவத்தால் தோன்றிய பெரியார் ஜீ. ஜீ, அவர்களின் சாதனைகள் தமிழ் வரலாற்றில் புகழ் பூத்த அத்தியாயங்கள் ஆகும. சேர் பொன், இராமநாதனின் பின்பு தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்தும்பெரும் பொறுப்பு இளம் வயதிலேயே அவர் தோள்களில் சுமத்தப்பட்டது.

1931ம் ஆண்டு டொனமூர் குழுவினரின் சிபார்சுகளை எதிர்த்துசேர். பொன். இராமநாதன் இங்கிலாந்தில் வாதாடியபோது இங்குள்ள பலர் அதனை ஏற்க முனைந்தனர் அப்போது இளைஞராக இருந்த ஜீ ஜீ. அவர்கள் தனது புத்திசாதுரியத்தினாலும் நாவன்மையாலும் அம்முயற்சியை முறியடித்தார். இதேபோன்று சோல்பரிக் குழுவின் சிபார்சுகளை எதிர்த்து ஜீ ஜீ அவர்கள் 1947ல் இங்கிலாந்தில் வாதாடிக்கொண்டிருந்த போது அவர் பொன். இராமநாதனுக்குதவியது போன்று இங்கு அவருக்குதவ எவருமிருக்கவில்லை. இதைப் பற்றிச் சிந்தியாத தமது நலத்தைப்பற்றிச் சிந்தித்தவர்களால் ஜீ ஜீ க்கு உதவ முடியவில்லை

1939ல் சேர். அன்றூ கோல்டிகொட் தேசதிபதியின் அறிக்கையை எதிர்த்து 14 மணித்தியாலங்கள் சட்டசபையில் தொடர்ந்து வாதாடினார். சிங்களத்தலைவர்கள் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்காவிடில் அவர்கள் தனி வழி செல்வரென அப்பொழுது அவர் கூறினார். 40 வருடங்களின் பின் தமிழ்ச் சமுதாயம் அதனை உணாந்தது தூங்கிக் கிடந்த தமிழனை ''தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' எனத் துடித்தெழச் செய்தது அவரே ஆகும் தமிழினத்தின் கௌரவத்தைதக்காக்க சமபலக்கோரிக்கையை முன்வைத்தார் அப்போது சிங்களத் தலைவர்கள் சீறி எழுந்தனர் ஜீ ஜீ அவர்கள் கலங்காது கொள்கையில் இருந்து விலகாது தொடர்ந்து போராடினார். தேசியக் கொடியை 1948ல் முதலாவது சுதந்திர தினத்தன்றே எதாத்து தனது செலவில் நந்திக்கொடியைத் தமிழர்களுக்கு வழங்கி முதலாவது நநதிக்கொடியைப் பறக்க விட்டவர் அவரேயாகும் தனித் தன்மையை நிலைநிறுத்தப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு ஜீ ஜீ அன்றே வழி காட்டினார்.

சட்டத்துறையில் சரித்திரம் படைத்திட்ட அவர் அத்துறையில் சர்வதேசப் புகழைக் கண்டார் சட்டத்தைக்கண்டு மனிதன் பயப்படுவதுண்டு. ஆனால் சட்டங்கள் ஜீ ஜீயைக் கண்டு பயப்பட்டன. சட்டத்துறையில் அவர் ஆடிய சொற்சிலம்பங்கள் 1976ல் தமிழ்த்தலைவர்களை விடுதலை செய்ய உதவியது 1966ல் ஐ நா, சபையில் தங்கத்தமிழன் ஜீ. ஜீ யின் குரல் தமிழன் ஊடாக ஒலித்தது சங்கத்தமிழன் தங்கக் கூற்றாகிய ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கருவூலத்தை தனது அச்சாணியாகக் கொண்டு அவர் ஆற்றிய உரை ஆங்கிலேயர்களை மெய்சிலிர்க்க வைத்தது அவரால் ஆங்கில மொழி சிறப்புப் பெற்றதென ஆங்கிலேயரே வாய் விட்டுக் கூறினர்.

சோர்ந்து நின்ற தமிழனுடைய உள்ளத்திலே சோர்வு போக்கி வீர உணர்ச்சியை ஊட்டிய உத்தமர். தாழ்ந்து நின்ற தமிழனுக்குத் தன்னம்பிக்கையைத் தந்தவர் தமிழ் உணர்ச்சியை வளர்த்தவர் பெரியார் பொன்னம்பலம். அடிமை வாழ்வை நாம் கேட்கவில்லை. உரிமை வாழ்வையே வேண்டுகிறோம் என இடித்துரைத்தவர் அவர். அவர் இன்று எம்மிடையே இல்லை, ஆனால் அவர் ஊட்டிய தமிழன்பு எம்மை விட்டு நீங்காது, அந்தஉணர்வே இன்று எமதுரிமைக்காகப் போராட வைக்கின்றது.

★ அ. குமாரவேல்.

## பாண்டிச்சேரியில் தி. மு. க. கூட்டணி

முப்பது இடங்களைக் கொண்ட பாண்டிச்சேரி சட்டப்பேரவைத்தேர்தல்போட்டியிடும் இடங்கள் குறித்து தி. மு க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் முடிவுக்கு வந்துள்ளன. இதன்படி தி மு. க 22 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் 4 இடங்களிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 3 இடங்களிலும் முஸ்லீம் லீக் ஒரு இடத்திலும் போட்டியிடும்.

கடந்த பொதுத் தேர்தலில் இக்கூட்டணியோடு இணைந்திருந்த ஜனதா கட்சி பாண்டிச்சேரியில் தனித்துப்போட்டியிட முடிவு செய்துள்ளது.

இந்திரா காங்கிரஸ், அ தி. மு. க கூட்டணி முறையே இருபது பத்து இடங்களில்போட்டியிடுகிறதென்பது தெரிந்ததே.

## பிரான்ஸில் அமைச்சர் ஹமீத்

(பாரிஸ்)

"இலங்கை அரசாங்கத்தின் முதற்பணி பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடி அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே'' என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி எஸ் ஹமீத் தமது பிரான்ஸ் விஜயத்தின் போது கூறியுள்ளார்.

அவர் பிரான்ஸ் வெளிநாட்டமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க் கட்சி தலைவர்கள் முதலானோரையும் சந்தித்தார்.

## மாஜி மந்திரிகள் இருவர் போட்டி

(பாண்டிச்சேரி)

மார்ச் மாதம் ஐந்தாம்திகதி நடைபெறவுள்ள பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலில் மாஜி முதலமைச்சர்களான இராமச்சந்திரன், இராமசாமி ஆகியோரும் போட்டியிடவுள்ளனர்.

முப்பது தொகுதிகளுக்கு நேற்று இறுதிநாள் வரை எழுபத்தேழு வேட்பு மனுக்கள் தாக்கலாகியிருந்தன, வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான இறுதிநாள் பதினோராம் திகதியாகும்.

ஈழமுரசு

## திருமலையில் திடீர் அமளிதுமளி! 'இவர்களுக்கு' பாதிப்பில்லை

(திருமலை)

திருமலை பஸ் நிலையத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நேற்று முன் தினம் சிறு நடை தரித்த சிலர் மேற்கொண்ட — தாக்குதல்களால் நகரப்பகுதி அமளிதுமளிப்பட்டது உணவுச்சாலையொன்றுக்குள் இருந்த பலர் தாக்கப்பட்டனராம் அதன் உரிமையாளரும் தாக்கப்பட்டாராம். தளபாடங்கள் நொருங்குண்டன. பஸ் நிலையத்தில் தனியார் பஸ் ஒன்றின் ஊழியர்களும் தாக்கப்பட்டனராம் முதல் நாள் சம்பவமொன்றின் பழிவாங்கலாக இது நடைபெற்றதென்றும், சிறுபான்மை இன மக்கள் எவரும் இதனால் பாதிக்கப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

### வவுனியாவிலிருந்து பஸ்ஸில் வந்தனர்:

# பூஸாவிலிருந்து நேற்று விடுதலைபெற்ற 51 இளைஞர் இன்று காலை வீடு செல்வர்

யாழ்தேவி மூலம் நேற்று வவுனியா வந்த 51 பூஸா இளைஞர்களை வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் அங்கிருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார் இவர்களை அழைத்துவருவதற்கென வவுனியா செல்வதற்காக யாழ் பஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை சென்ற யாழ் செயலக பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு எஸ், சண்முகசுந்தரம் திடீரென மாரடைப்பால் மரணமானதால், வவுனியா அரச அதிபர் இவ் ஒழுங்குகளைச் செய்தார்.

51 இளைஞர்களில் 8 பேர் வழியில் இறங்கினர். மீதி 43 பேரும் யாழ்ப்பாணம் செயலகத்தை வந்தடைந்த போது, தேர்தல் கந்தோர் ஊழியர்கள் இவர்களை வரவேற்று பாலும் தேநீரும் வழங்கி உபசரித்தனர்.

43 இளைஞர்களும் நேற்றிரவு கோண்டாவில் டிப்போவில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தனர் இவர்கள் இன்று காலை தத்தமது இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவர்என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

விடுதலைபெற்ற 51 இளைஞர்களின் பெயரும் விபரமும் வருமாறு:-

மு. அருளானந்தன் (தெல்லிப்பளை) த. அருள்முருகானந்த வடிவேல் (கைதடி) அ அ. மரியதாஸ் (சில்லாலை) செ அ. விஜயகுமார் (சில்லாலை) த. அருள்செல்வம் (சுழிபுரம்) து அழகரத்தினம் (கொக்குவில்) கி. அருட்செல்வம் (நவாலி) க அருட்செல்வன் (பண்டத்தரிப்பு) ம அன்ரன் மரியதாஸ் (பண்டத்தரிப்பு) மு. பாலகிருஷ்ணன் (தெல்லிப்பளை) அ பென்சமின் ஜெயசீலன் (சில்லாலை) க சந்திரபாலன் (தெல்லிப்பளை) ப இந்திரன் (கைதடி) சி ஜீவா (புங்குடுதீவு) க. குலசிங்கம் (கொக்குவில் மேற்கு) சி குமாரன் (ஆனைக்கோட்டை) சீ கமலேஸ்வரன் (தெல்லிப்பளை) அ குலசேகரன் (கொக்குவில்) கி. கஜேந்திரன் (சில்லாலை) ந. மகரூபன் (கொக்குவில்) அ. முத்துராசா (கொக்குவில்) பூ மகேந்திரன் (கொக்குவில்) ச நிர்மலன் (கைதடி) இ நேசரத்தினம் (சுதுமலை) பொ ரவீந்திரன் (கைதடி) இ. ராசலிங்கம் (தெல்லிப்பளை) சு. இராமநாதன் (தெல்லிப்பளை) ப ராஜ்குமார் (பண்டத்தரிப்பு) ம ராமநாதன் (கோண்டாவில்) சு சிவதாசன் (கைதடி) சூ ஸ்டீபன் ஆனந்தராஜா (சில்லாலை) க, செந்தில் ரங்சன் (திருநெல்வேலி) ந சுதாகரன் (கொக்குவில்) பா. ஸ்ரீ பாஸ்கரன் (தெல்லிப்பளை) சி. சிவகுமாரன் (கைதடி) ந. தெய்வேந்திரன் (பண்டத்தரிப்பு) வெ தெய்வேந்திரன் (குப்பிழான்) சு. கனாராஜ் (கொக்குவில்) ச திருலோகநாதன் (கொக்குவில்) ஐ. உதயகுமாரன் (புங்குடுதீவு) இ வசீகரன் (குப்பிழான்) ரி விக்டர் இமானுவேல் (சில்லாலை) தி விட்டலநாதன் (இணுவில்) பெ யோகராசன் (திருநெல்வேலி) மு. தெய்வேந்திரன் (பண்டத்தரிப்பு) பொ. ஜெயக்குமார் (கோண்டாவில்) தே. மயில்வாகனம் (யாழ்ப்பாணம்) ச. இராஜகோபால் (யாழ்ப்பாணம்) க ராஜகுலசிங்கம் (மண்கும்பான்) வி. சுதாகரன் (தொண்டமாறு) த. வர்ணசிங்கம் (தொண்டமாறு)

## கடலில் மூழ்கிய பொலிஸ்காரர்

(மன்னார்)

தலைமன்னார் அதிரடிப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார். கடலில் குளித்துக்கொண்டிருக்கையில் இச்சம்பவம் நடைபெற்றது

## வடக்கில் எதிர்ப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதாபிமானமற்ற அசம்பாவித செயல்களைக் கண்டிக்கும் வகையில் எதிர்ப்பு தினமொன்றை நடத்த வட பிரதேசங்களின் பதின்மூன்று தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு ஆலோசித்துள்ளது. இது தொடர்பான தீர்மானமெடுக்கும் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளன வட பிரதேச அலுவலகத்தில் நடைபெறும்.

## தாழ்மையான வேண்டுகோள்

எங்கள் நிறுவனமான 'டையமண்ட் ஓகனேசேசன் பிறைவேற் லிமிடட்' யாழ்ப்பாணத்தில் 32, பாங்ஷால் வீதியில் தலைமை அலுவலகத்தையும், ஸ்ரேசன் வீதி. வவுனியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தில் பதினைந்து ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள்.

எமது நாட்டின் தற்போதைய இக்கட்டான நிலைமை காரணமாக ஸ்தாபனம் நட்டத்தில் இயங்குவதனால் ஊழியர்கள் தங்கள் கடந்த மூன்று மாத ஊதியத்தை பெறமுடியாத பட்சத்திலும் மனம் தளராது தொடர்ந்தும் ஓர் எதிர்பார்ப்புடன் நிர்வாகமும் ஊழியர்களும் இயங்கிக் கொண்டிருந்தோம் இக்கட்டத்தில 8-2-85 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 2 45 மணியளவில் நிகழ்ந்த சம்பவம் ஓர் பேரிழப்பாகும்.

அதாவது ஆயுதம் தாங்கிய சில இளைஞர்கள் எமது ஸ்தாபனத்தினுட் புகுந்து 'யமஹா' உற்பத்தியந்திரங்களையும், மோட்டார் வாகன பற்றறிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்,

இது ஓர் யாழ்ப்பாணத்தில் தலைமை நிறுவனத்தைக் கொண்ட முற்றுமுழுதான தனியார் நிறுவனமாகையால் இப்பேரிழப்பைச் சமாளிக்க முடியாது நிர்வாகம் நிறுவனத்தை மூட உத்தேசித்துள்ளது. தனால் பதினைந்து குடும்பங்கள் மாத வருமானமின்றி தவிக்க வேண்டிய நிலையில் உள்ளன. எனவே இவற்றை எடுத்தவர்கள் யாராக இருந்தாலும் அவற்றைத் திருப்பி ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

நிர்வாகமும்
ஊழியர்களும்
டையமண்ட் ஓகனேசசன் பிறைவேற் லிமிட்டட்.
32, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் - பத்மரூபன்



கட்டப்பிராயைச் சேர்ந்த பத்மநாதன் பத்மரூபன் அகால மரணமானார். இவர் குவைத் செல்லையா பத்மநாதன் (முன்னாள் கோப்பாய் கிராம சபை மின் ஊழியர்) இராஜேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வனும் இராஜரூபியின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை திங்கட் கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திரு. சண்முக...

—1-ம் பக்கத் தொடர்

நிலையத்துக்கு நேற்றுக் காலை 6 30 மணியளவில் சென்ற போது இவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டார்.

59 வயதிலும். இளைஞர் போல, மிகத்துணிச்சலுடன் நல்ல பல காரியங்களுக்கு முன்னின்று உழைத்தவர் இவர். ''இந்தப்பணியைச் செய்வதில் எத்தனை சிரமங்கள் இருந்தாலும் நான் மிகவும் திருப்தி அடைகின்றேன்'' என்றுநேற்று முன்தினம் இரவு 'ஈழமுரசு'க்குத் தொலைபேசியில்தெரிவித்த திரு. சண்முகசுந்தரம், தாம் விரும்பியது போலவே நல்ல பணியைச் செய்வதற்குச்செல்லும் போது மரணமாக நேர்ந்தது இறுதிக்கிரியைகள் பற்றியதினம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

### லலித் ..

—1 ம் பக்கத் தொடர்

நிலையத்தில்வந்திறங்கியபோது திரு ஜி பார்த்தசாரதி அவரைச் சென்று வரவேற்றார். நேற்று மாலை திரு பார்த்தசாரதியுடன் அமைச்சர் அத்துலத்முதலி ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினார்.

இலங்கையின் இந்தியத் தூதுவர் திரு எஸ். ஜே, எஸ். சத்வால், இந்தியாவின் இலங்கைத் தூதுவர் திரு பெர்னாட் திலகரத்தின ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் நாளை கொழும்பு திரும்புவதற்கு முன்னர் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பி வி. நரசிம்மராவை சந்திப்பார்.

### கான்ஸ்டபிள்...

1- ஆம் பக்கத் தொடர்

நேற்று முன்தினமிரவு பொலிஸ் விடுதியில் தாக்கப்பட்டு காயமடைந்ததால் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

### இரு கொள்ளை...

1-ஆம் பக்கத் தொடர்

முன்தினம் இனம் தெரியாத மூவர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கோண்டாவில் டிப்போவில் நின்ற பஸ் ஒன்றிலிருந்து நாற்பத்தாறு லீற்ற டீசல் இனம் தெரியாத ஐவரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் பற்றி யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### மாலைதீவு...

—1-ம் பக்கத் தொடர்

பிரச்சினைப்பற்றிப் பேசவைக்க மாலைதீவு ஜனாதிபதி முயற்சி எடுத்து வருவதாக சில பத்திரிகைகளில் நேற்று வெளியான செய்தியை இலங்கையிலுள்ள மாலைதீவு தூதரகம் மறுத்துள்ளது. இது தொடர்பாக மேற்படி தூதரகம் நேற்று பகல் விடுத்த பத்திரிகை அறிக்கையொன்றில் இந்த மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக..

—1-ம் பக்கத் தொடர்

வர்கள் ராமநாதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

முன்னர் மூன்று ராமநாதபுரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டு மரணமானதும். இந்திய மீனவரை இம்சைபடுத்திய ஏழு கடற்படை வீரர் கைதாகி பின்னர் விடுதலையானதும் தெரிந்ததே.

### கிளிநொச்சி...

—1-ம் பக்கத் தொடர்

க்கான ரூபா பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டன, பிடிபட்ட கொள்ளையர்கள் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

### குளோபல்...

—1-ஆம் பக்கத் தொடர்

னால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படையும் நிலை உருவாகியுள்ளது. நகரிலுள்ள மற்றொரு நிறுவனத்தின் ரெலக்ஸ் இயந்திரமும் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

### மாதகல்...

—1-ம் பக்கத் தொடர்

வும் கூறப்படுகிறது.

கடற்கண்காணிப்புப் பிரதேசத்தில் இவர்கள் சுடப்பட்டார்களாம் ஒருவர் பிடிபட்டதாகவும் நான்கு பேர் தப்பிவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## திருமண அழைப்பு

அன்படையீர்!

காலம்:- 11-2-85 (திங்கள்) காலை 8. 00 மணி
மணமகன்:- ஐயாத்துரை மகேந்திரராசா
மணமகள்:- மயில்வாகனம் மஞ்சுளா (பா)
இடம்:- அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மண்டபம்
உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்

| | |
|---|---|
| செ. ஐயாத்துரை | மு மயில்வாகனம் (கிராம சேவையாளர்) |
| கனகாம்பிகை தம்பதிகள் | தங்கலட்சுமி தம்பதிகள் |
| பொன்னம்பலம் வீதி. | 5/5, அரசளம்பலம் வீதி, |
| அரியாலை, | அரியாலை, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37.கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 10-2-85 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.